# கூழாங்கற்களைக் குன்றென உயர்த்துவது குறிக்கோளே!

சிறுவர்கள் இருவர் மாலை நேரத்தில் பந்து விளையாடிக்கொண்டிருந்தனர். ஆட்டம் விறுவிறுப்பாகத் தொடர்ந்தபோது இருட்டத் தொடங்கிவிட்டது. ஆட்டத்தைத் தொடர முடியாமல் தடுத்து நிறுத்திய இருட்டின்மேல் இருவருக்கும் கோபம் கோபமாய் வந்தது.

''இந்த இருட்டை எப்படியாவது நீக்கிவிட்டால் தொடர்ந்து நாம் விளையாடிக்கொண்டிருக்கலாம் அல்லவா?'' என்றான் ஒருவன்.

''அது எப்படி முடியும்? இருட்டு இயற்கை. இருட்டுவது தவிர்க்கமுடியாதது. அதை எப்படிப் போக்க முடியும்?'' என்று நகைத்தான் மற்றொருவன்.

ஆனால், அந்த முதல் சிறுவன் இந்த நகைப்பில் அடங்கிவிடவில்லை. ''இன்று எங்கள் ஆட்டத்தைக் கெடுத்த இருட்டைப் போக்கியே தீருவேன்,'' என அன்று சபதமிட்டான். அதைப்பற்றியே அந்தப் பத்து வயது சிறுவன் சிந்தித்துக்கொண்டிருந்தான். அதையே தன் வாழ்வின் குறிக்கோளாக்கி, அதற்காகப் பல ஆண்டுகள் மனத்தை ஒருமுகப்படுத்தி உழைத்தான். தன் முயற்சி தோற்கும் என எள்ளி நகையாடியோரையும், தன் உழைப்பைப் பழித்தோரின் இழிசொற்களையும் காதில் வாங்காமல்( உண்மையில் அவனுக்கு வசதியாகக் காதே செவிடானது) ஆய்வுகள் செய்தான்.

இந்தச் சிறுவன் தான் மின்சார விளக்கைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன். இன்று நள்ளிரவில் மின்சார விளக்கின் ஒளிவெள்ளம் கரைபுரண்டோட ஒலிம்பிக் முதலான போட்டிகள் நிகழ்வதற்கு இந்தச் சிறுவன் அன்று தன் வாழ்வில் முன்வைத்த குறிக்கோளே காரணம்.

அத்திப்பழத்தில் தோன்றும் கொசுக்கள் போல மனிதர்கள் கோடிக்கணக்கில் இந்தப் பூவுலகில் தோன்றி, வாழ்வில் எந்தத் தடயமுமின்றி, தம் வாழ்விற்கு எந்த அர்த்தமுமின்றிச் செத்துப்போகிறார்கள். உலகின் மக்கள் தொகையைக் கூட்டுவது தவிர அவர்களால் வேறு எந்தப் பாதிப்பும் இல்லை.

மிகச் சிலரே இந்த உலகத்தின் போக்கைச் சீரமைக்கிறார்கள்; மனிதர்களின் வாழ்வை மேம்படுத்துகிறார்கள்; மானிடர்களின் பல்வேறு வேதனைகளைத் தீர்க்கிறார்கள். அவர்கள் கூழாங்கற்களாக இந்த உலகில் தோன்றினாலும் தம் வாழ்வில் உயர்ந்த குறிக்கோளை முன்வைத்து உழைப்பதனால் குன்றென உயர்கிறார்கள்; வரலாறு படைக்கிறார்கள்.

இந்த உலகில் அர்த்தமற்ற பிறவியெடுத்து அத்திப்பழக் கொசுக்களாக வாழ்ந்து மடிய விரும்புகிறீர்களா அல்லது குறிக்கோளை முன்வைத்துக் குன்றென உயர்ந்து உங்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாக்க விரும்புகிறீர்களா, என்று முடிவு செய்யுங்கள்.

குறிக்கோளுடன் வாழ்வது என முடிவுசெய்தால் உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு சோகங்கள்





தாமஸ் ஆல்வா எடிசன்



ரைட் சகோதரர்கள்

சூழ்ந்தாலும் மனத்தில் நிறைவு இருக்கும். அதனால் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். சாதிக்கிறீர்கள் என்ற நிறைவு உங்களுக்குப் பேரின்பம் தரும்.

உங்களிடம் இருக்கும் திறமையைக் கண்டறிந்து அதற்கேற்ப ஒரு குறிக்கோளைத் தீர்மானியுங்கள். அது நாட்டின் அதிபராக வரவேண்டுமென்றோ, உலகத்தின் முதல் பணக்காரராக விளங்கவேண்டுமென்றோ அமையவேண்டும் என்பதில்லை. ''மிகச் சிறந்த ஆசிரியனாக இருப்பேன். அல்லது மிகத் திறமையான காவல் துறை அதிகாரியாக விளங்குவேன்,'' என்று கூட இருக்கலாம். மோசமான அரசியல் தலைவனைவிட மிகச் சிறந்த அரசு அதிகாரி மக்களுக்குத் தொண்டாற்றி, வரலாறு படைக்க முடியும்.

உங்கள் குறிக்கோளை உங்கள் பெற்றோரோ, உறவினரோ, நண்பர்களோ முடிவு செய்ய முடியாது. அவர்கள் உங்கள் குறிக்கோளைக் கண்டறிய உதவலாம். ஆனால், முடிவு செய்வது நீங்களாகவே இருக்க வேண்டும். வேண்டா வெறுப்போடு, வீட்டினரின் கட்டாயத்தால் மருத்துவம் படித்து மூன்றாந்தர மருத்துவராவதைவிட, சைக்கிள் கடையொன்றைத் திறமையாக நடத்திப் புகழ்பெற்ற சைக்கிள் தயாரிப்பாளராக உயரலாம். சைக்கிள் கடை நடத்திய ரைட் சகோதரர்கள்தாமே ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தார்கள் !

உங்களுக்கு விருப்பமான துறை எது? உங்களைத் தீராது குடையும் சிந்தனை எது? உங்கள் ஆற்றல் எதில் மேம்படுகிறது? இந்தக் கேள்விகளுக்குப் பதில் எழுதிப்பாருங்கள். இந்தப் பதிலில் உங்கள் பலம், உங்கள் போக்கு உங்களுக்குத் தென்படும். அதனடிப்படையில் குறிக்கோளை இந்த இளமையில் தீர்மானியுங்கள். குறிக்கோளுக்குரிய பருவம் நடுவயதோ, முதுமையோ அல்ல.

குறிக்கோளை முடிவு செய்யும் முன் ஆயிரம் முறை சிந்தியுங்கள். முடிவு செய்தபின் எந்தத் தடை வந்தாலும் பயணத்தின் பாதை மாறக்கூடாது .

**''எண்ணித் துணிக கருமம், துணிந்தபின்,**
**எண்ணுவம் என்பது இழுக்கு''** என்று திருவள்ளுவர் குறிக்கோளை அடையச் சிறந்த வழிகாட்டியுள்ளார்.

பறவையை வீழ்த்த அம்பை எடுத்த அர்ச்சுனன் கண்ணுக்கு மரம் தெரியாது; கிளை தெரியாது; கிளையில் அமர்ந்துள்ள பறவை தெரியாது; பறவையின் கண் மட்டுமே தெரிந்ததாம். அதனால் குறிதவறாது கண்ணில் பாயும் அம்பு பறவையை வீழ்த்தியது. இத்தகைய கவனச்சிதறல் அற்ற கூர்மையான பார்வையுடையோரே குறிக்கோளில் வெற்றிபெற முடியும்.

நாம் எதைத் தியானிக்கிறோமோ அதுவாகவே ஆகிறோம். ஆழ்மனத்தில் தேக்கிவைக்கும் நம் குறிக்கோளில் ஒன்றித்துப்போய், சிந்தித்தால், குறிக்கோள் நம் வசப்படும். அதற்கான வழிமுறைகள் தாமே பிறக்கும். திறக்கமுடியாத கதவுகளுக்குச் சாவிகள் கிடைக்கும். இருட்டு மனவானில் மின்னல் கீற்றுகள் அடித்துப் புதிய வழி தெரியும்.

**''குளத்தைத் தேடித் தவளைகளும், தடாகத்தைத் தேடி அன்னப்பறவைகளும், எப்படித் தாமாகவே வருகின்றனவோ அதுபோல முயற்சியும் உயர்ந்த குறிக்கோளும் உடையவனைத்தேடி இன்பமும் புகழும் வந்து சேருகின்றன''** என்பது உயர்ந்த குறிக்கோள்களைக்கொண்ட மக்களையுடைய ஜப்பானிய நாட்டுப் பழமொழியாகும். M